# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறு தர மதிப்பீட்டிலும் "ஏ" தகுதி பெற்றது)

நாள் : 21.2.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் "உலகத் தாய்மொழி நாள் விழா" இன்று (21-2-2017) பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.



அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரையாற்றுகையில், தாய்மொழி என்பது ஒவ்வொரு மனித இனத்தவர்களாலும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். நமது மூதாதையர் நமக்கு வழங்கிய செல்வத்தை அடுத்த தலைமுறைக்கு கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும். அதற்கு இந்த தலைமுறையிலேயே பாதுகாக்க வேண்டும். தாய்மொழியில் பேசுவதன் மூலமாகவும், எழுதுவது மூலமாகவும் மட்டுமே இது நிறைவேறும். உலக மொழிகளில் தமிழ்மொழி மட்டுமே மூவாயிரம் ஆண்டுகளாக பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்மொழி தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், உலக நாடுகளிலும் பேசப்பட்டு வருகிறது. சிங்கப்பூரில் ஆட்சி மொழியாகவும், இலங்கை, மலேசியா, ஆகிய நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாகவும், இங்கிலாந்து, அமெரிக்கா, நார்வே, கனடா, ஆஸ்திரேலியா, பிரான்சு, ஜெர்மனி, மொரிசியஸ், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பேசப்படும் மொழியாகவும் விளங்குகிறது. உலகம் முழுவதும் 200 மில்லியன் மக்கள் திராவிட குடும்பத்து மொழிகளை பேசிக்கொண்டும், பயன்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். தமிழ்மொழியை யார் வளர்த்தாலும், அவர்களை பாராட்ட வேண்டும். தமிழ் இலக்கியங்களுள், ஆத்திசூடியையும், திருக்குறளையும் படித்தால், மாணவர்கள் மிக உன்னதமான நிலையை அடையலாம் என்றார்.

திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரி தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ச. நீலகண்டன் அவர்கள் தமது சிறப்புரையில், உலகச் செம்மொழிகளுள் பேச்சுவழக்கில் இருப்பது சீனமும், தமிழும் மட்டுமேயாகும். இன்றைய இளைஞர்கள் தாய்த் தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும், உலகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். தமிழகத்தில் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெரியகோவிலும், சோழன் கரிகாற் பெருவளத்தானால் கட்டப்பட்ட கல்லணையும், கட்டடக் கலை தொழில்நுட்பத்தை உலகிற்கு பறைசாற்றுகின்றன. தமிழ் செம்மாந்த மொழி, சிறந்த சிந்தனைகளைக் கொண்ட மொழி, உலகம் போற்றும் கருத்துக்களை கொண்ட மொழி, நாம் அனைவரும் தாயோடும், தாய் மண்ணோடும், தாய்மொழியோடும், வாழ்ந்தால் தான் இவ்வுலகில் வாழ்ந்ததாக பொருள். அன்னைத் தமிழின் தாய்ப்பாசம், பேசும் தாய்மொழியில்தான் நிறைந்து காணப்படுகிறது. பல மொழிகளை கற்றாலும், தாய்மொழியில் பேசுவதுதான், உலகத் தாய்மொழி விழா கொண்டாடுவதன் பயனாக இருக்கும் என்றார். மேலும், அவர் மாணவர்கள் தத்தம் துறை சார்ந்த கருத்துக்களை தாய்மொழியாம் தமிழில் எழுதுவதே தமிழ் அன்னைக்கு ஆற்றும் அருந்தொண்டாகும் என்றும் கூறினார்.

பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு துணைவேந்தர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் இராம இராமநாதன், தமிழாசிரியர் திரு. நாச்சியப்பன் உட்பட தமிழ் ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அழகப்பா பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேரா. மு. பாண்டி அனைவரையும் வரவேற்றார். விழாப் பொறுப்பாளர் திரு. மு. நடேசன் நன்றி கூறினார்.

பேரா. வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)